Fish Farmers Development Agency in Kanyakumari

*Q. No 950— THIRU P. VIJAYARAGHAVAN: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(a) whether the Government has any proposal to extend the scheme of Fish Farmers Development Agency to Kanyakumari district; and

(b) if so, the present stage of the scheme?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தை நடப்பு நிதி ஆண்டில் (1981-82) நிறைவேற்றலாமா என்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

காஞ்சிபுரம் குற்றவியல் நீதிமன்றம்.

*வினா எண் 1020—திரு ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் குற்றவியல் நீதிமன்றம் குற்றவியல் நடுவர் இல்லாமல் ஓராண்டு காலமாக நடைபெற்று வருவது உண்மையா?

(ஆ) இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) 1-11-80-லிருந்து மட்டுமே இந்த இடம் காலியாக உள்ளது தற்போது காஞ்சிபுரம் நீதிமன்றத்திற்கு ஒரு நீதிபதியை நியமித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவர் விரைவில் பதவி ஏற்க இருக்கிறார்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியான காஞ்சிபுரத்திலே ஓர் ஆண்டுக் காலமாகவே நடுவர் பதவி காலியாக இருக்கின்றது. அதனால் பொதுமக்களுக்கும் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு யார் பொறுப்பு, அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன விடை (ஆ)-வில் இந்தப் பதவி எப்போதிருந்து காலியாக இருக்கின்றது என்பதைச் சொன்னேன். 1–11–80–லிருந்து இந்த இடம் காலியாக இருந்தது. அதற்குக்காரணம் திருமதி வசந்தாமணி என்றஒருவரை குற்றவியல்

நீதிபதியாக அமர்த்தியதற்குப் பிறகு உயர்நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ள சில காரணங்களின் அடிப்படையில் அவர் அந்தப் பணியிலிருந்து திரும்ப தாய்த் துறைக்கு அனுப்பப்பட்டு விட்டார். அதன் காரணத்தால்தான் அந்த இடம் காலி ஏற் பட்டது. தற்போது உயர்நீதிமன்றம் அதுபற்றி ஆய்ந்து வேறு ஒருவரை நியமித்து உத்தரவிட்டிருக்கின்றது.

ஏழைகளுக்கான இலவச சட்ட உதவி அளிக்கும் திட்டம்.

*வினா எண் 1021—திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

ஏழைகளுக்கான சட்ட உதவித் (Legal Aid to Poor) திட்டத்தை அமுல்படுத்த நிரந்தர வழக்குரைஞர்களை ஒவ்வொரு நீதிமன்றத்திலும் நியமிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இலவச சட்ட உதவித் திட்டத்தின்கீழ் வழக்கறிஞர்களை நிரந்தர அடிப்படையில் நியமிப்பதில் உள்ளதை விட தேர்ந்த பெயர்ப்பட்டியல் முறையில் நிறைபாடுகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, இப்போதுள்ள முறையில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச சட்ட ஆலோசனைக்குழுவில், பணியாற்றுகிற வழக்கறிஞர்கள் நியமிக்கப் பட்டு, 15 நாட்களுக்கு ஒருவர் என்று முறை வைத்து அலுவல கத்தில் அமர்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற வழக்குகளைப் பார்க்கிற அவசர அவசியத்தில் இந்தஇலவச சட்ட ஆலோசனைக் குழுவை அணுகுகிற நபர்களின்வழக்குகளைமுறையாக என்னென்ன சொல்கிறார்கள் என்ற தகவல்களை கூட கவனிப்பதற்கு அவர் களால் முடிவதில்லை, கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, வழக்குகளை நடத்துவதற்கு தற்போது இருக்கக்கூடிய அமைப்பு முறையில் வழக்கறிஞர்கள் குழு இருந்தாலும் கூட, அந்த வழக்கு களின் ஆரம்ப நிலையில் என்னென்ன தகவல்கள் தேவை என்பதை சேகரித்து செம்மையாக செய்வதற்கு, வட்டத்திற்கு ஒரு நிரந்தர வழக்கறிஞர் நியமிக்கிற முறையிலே அரசு பரிசீலிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டுவது போன்ற சிஸ்டம் ஆப் அப்பாயிண்டிங் லாயர்ஸ் என்கிற முறையைப் பொறுத்தவரைக்கும் கர்நாடக மாநிலத் திலும் கேரள மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மற்றப்பகுதிகளில் எல்லாம், சிஸ்டம் ஆப் பேனல்ஆப் லாயர்ஸ் என்ற முறைதான் நடைமுறையில் இருந்து வருகிறது.